**வேலூர் மாவட்டம்**

**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி**

**கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்**

**முன்னிலை: திரு. க. முனுசாமி, M.A., M.Sc., MBA., B.Ed., M.Phil**

**ந.க. எண்.448/மாஒ6/ந.ஊ.ப/ஒபக/2023 நாள்: 30.03.2023**

**பொருள்:** பள்ளிக்கல்வித்துறை –"நம்ம School- நம்ம ஊரு பள்ளி" இணையதளம் (portal) - தனிப்பட்ட மற்றும் சமூக பங்களிப்பு நிதி (CSR), பொருட்கள் மற்றும் தன்னார்வல சேவைகள் பெறுதல் - அரசு பள்ளிகளுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பிற வசதிகளை EMIS வலைதளத்தில் உள்ளீடு செய்தல் மற்றும் முன்னாள் மாணவர்களுக்கான பதிவுகள் ஊக்கப்படுத்துதல் - வழிகாட்டு நெறிமுறைகள் வழங்குதல் -சார்பு.

**பார்வை:** உறுப்பினர் செயலாளரின் செயல்முறைகள், ந.க.எண் 010/ஆ6/ந.ஊ.ப/ஒபக/2023 நாள்: 28.03.2023

---

**நம்ம School- நம்ம ஊரு பள்ளி**

1. **நம்ம School- நம்ம ஊரு பள்ளி** என்ற ஒரு புதிய முயற்சியானது பள்ளிக்கல்வி துறையின் கீழ் செயல்படும் அரசு பள்ளிகளின் மேம்பாட்டிற்காக பொதுமக்கள், முன்னாள் மாணவர்கள், அரசு சாரா தொண்டு நிறுவனங்கள், பெரு, சிறு மற்றும் குறு நிறுவனங்களின் சமூக பங்களிப்பு நிதி, பொருட்கள் மற்றும் சேவைகள் பெற உருவாக்கப்பட்டுள்ளது. இதன் வாயிலாக சேகரிக்கப்படும் நிதியானது வேலூர் மாவட்டத்தில் உள்ள 797 அரசுப் பள்ளிகளின் தேவைகளை பூர்த்தி செய்ய வழிவகை செய்கிறது.

2. மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களால் டிசம்பர் 19, 2022 அன்று தனி இணையதளம் (https://nammaschool.tnschools.gov.in/#/) தொடங்கப்பட்டு அதற்கென தனி வங்கி கணக்கு உருவாக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது.

3. இந்த இணையதளம் வாயிலாக பெறப்படும் நிதியானது வெளிப்படைத்தன்மையுடன் செலவினம் மேற்கொள்ளப்படுவதற்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்ட அளவிலான குழு உருவாக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

மேலும், பள்ளி அளவில் மேற்கொள்ளப்படும் பணிகள், சார்ந்த பள்ளிகளின் பள்ளி மேலாண்மை குழு (School Management Committee) வாயிலாக மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்யப்படுகிறது. அப்பணி நிறைவடைந்த பின், பயனீட்டுச்சான்றிதழ் சார்ந்த நன்கொடையாளருக்கு அளிக்கப்படுவது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து அனைத்து அரசு பள்ளிகளிலும் உள்ள உட்கட்டமைப்பு தேவைகள் மற்றும் பிற இன்றியமையா தேவைகள் சார்ந்த தலைமை ஆசிரியர்களால் EMIS இளையதளத்தில் உள்ளீடு செய்ய வேண்டி உள்ளது

4. அரசுப்பள்ளி தலைமையாசிரியர்கள் EMIS login-ல் SCHOOL Menu-வில் "நம்ம School - நம்ம ஊரு பள்ளி" என்ற இணைப்பை click செய்து அதில் Category, Sub category என்பதை தேர்ந்தெடுத்து தங்கள் பள்ளிகளுக்கு தேவையான(Items and Quantity) உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பிற இன்றியமையா தேவைகளை சரியாகவும், துல்லியமாகவும் உள்ளீடு செய்ய அறிவுறுத்தப்படுகிறது.

5. மேலும் உட்கட்டமைப்பு தேவைகளை பொறுத்தமட்டில் மாவட்ட மற்றும் வட்டார பொறியாளர்களால் School Infrastructure Development Scheme (SIDS) செயலி வாயிலாக சேகரிக்கப்பட்ட கீழ்காணும் தேவைகள் சார்ந்த தரவுகள் பள்ளிகளின் தேவைகளாக வழங்கப்பட்டிருக்கும்.

- பள்ளியில் தாழ்வான பகுதிகளை நிரப்புதல்
- நீர் தேங்குவதை தடுக்க வடிகால் அமைப்பு
- நீர் தேங்கும் பகுதிகளை நிரப்புதல்
- திறந்த கிணறுகள்/ குழிகளை மூடுதல்
- செப்டிக் டேங்க் பழுது பார்த்தல்
- புதிய சுற்றுச்சூழல் -5 அடி உயரம் கிரில் கேட் 4மீ
- சுற்றுச்சுவர் - வெள்ளை அடித்தல் (two coats)
- அதிகரிக்கப்பட வேண்டிய சுற்றுச்சுவர் உயரம்
- சுற்றுச்சுவர் கலவை பூச்சு
- சுற்றுச்சுவர் -செங்கல் கட்டுவேலை (Brick work)
- பள்ளி கட்டிட கட்டமைப்பு பழுது பார்த்தல்
- கைப்பிடியுடன் கூடிய சாய்வு தளங்கள் பழுது பார்த்தல்
- தரை பழுது பார்த்தல்
- வகுப்பறை/ கழிப்பறை/ பிற அறைகள் பெரிய பழுதுபார்த்தல்
- வகுப்பறை /கழிப்பறை /பிற அறைகள் சிறிய பழுது பார்த்தல்

- பம்பு பழுது பார்த்தல்
- சம்புகளை பழுது பார்த்தல் /சுத்தம் செய்தல்
- ஆழ்துளை கிணறு தூர்வாருதல்

மேற்குறிப்பிட்ட தேவைகளில் எவ்வித மாற்றமும் தலைமை ஆசிரியர்களால் மேற்கொள்ள இயலாது. பள்ளியின் பிற உட்கட்டமைப்பு தேவைகளை உள்ளீடு செய்வதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

6. பிற தேவைகளை பொருத்தமட்டில் பள்ளிக்கு இன்றியமையாத் தேவைகளை மட்டுமே உள்ளீடு செய்யவும், மிகுந்த கவனத்துடன் செய்யவும் அனைத்து தலைமை ஆசிரியர்களும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

7. மேலும் பள்ளிக்கான தேவைகளை வருகின்ற 30.04.2023- க்குள் பத்தி 4-ல் குறிப்பிட்டுள்ளவாறு உள்ளீடு செய்து முடிக்க அனைத்து அரசு பள்ளி தலைமை ஆசிரியர்களும் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதன்பிறகு எவ்வித தேவைகளையும் சேர்க்கவோ நீக்கவோ இயலாது என்பதும் அதன் பிறகு தேவைகளை உள்ளீடு செய்வதற்கான அனுமதி முடக்கப்படும் என்பதும் அரசு பள்ளி தலைமை ஆசிரியர்களும் தெரிந்துகொள்ள வேண்டும். சார்ந்த பள்ளி தலைமை ஆசிரியர்களால் பதிவேற்றம் செய்யப்படும் தேவைகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது, எனவே இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து அனைத்து அரசு பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களும் கவனமுடன் செயல்பட வேண்டும்.

## முன்னாள் மாணவர்களுக்கான பதிவு (Alumni Registration)

8. மேலும் இந்த நம்ம SCHOOL- நம்ம ஊரு பள்ளி இணையதளத்தில் சார்ந்த பள்ளிகளின் முன்னாள் மாணவர்களை பள்ளிகளில் பதிவு செய்வதற்கு ஒரு முன்னெடுப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கென மேற்குறிப்பிட்டுள்ள வலைதளத்தில் முகப்பு பக்கத்தில் (Landing Page) முன்னாள் மாணவர்களுக்கான பதிவு (Alumni Registration) என்று கொடுக்கப்பட்டுள்ளது.




9. இத்தகவலை, சார்ந்த பள்ளியின் முன்னாள் மாணவர்கள் அனைவரும் அறியும் வண்ணம் செய்து பெருமளவில் நம்ம School-நம்ம ஊரு பள்ளி வலைதளத்தின் வாயிலாக பதிவு செய்திட ஊக்குவிக்கவும் பள்ளியின் செயல்பாடுகளை தங்களை இணைத்துக் கொள்வதற்கும் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க சார்ந்த தலைமை ஆசிரியர் களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

இணைப்பு:

வழிகாட்டு நெறிமுறைகள்

கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி
வேலூர் மாவட்டம்.

பெறுநர்

அனைத்து அரசு தொடக்கப்பள்ளி/ நடுநிலை/ உயர்நிலை/ மேல்நிலை பள்ளி தலைமை ஆசிரியர்கள், வேலூர் மாவட்டம்.

நகல்:

1. மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர், வேலூர் அவர்களுக்கு தகவலுக்காக கனிவுடன் அனுப்பலாகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை / தொடக்கக்கல்வி), வேலூர் மாவட்டம்.

## இணைப்பு

## பள்ளி தேவைகளை உள்ளீடு செய்வதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் உட்கட்டமைப்பு வசதிகள்

1. கூடுதல் வகுப்பறைகள்
2. மாணவ மாணவிகளுக்கான கழிப்பறைகள்
3. மாற்றுத்திறன் மாணவர்களுக்கான கழிப்பறைகள்
4. ஆசிரியர்களுக்கான கழிப்பறைகள்
5. அறிவியல் ஆய்வகம்
6. இயற்பியல்/ வேதியல்/ உயிரியல் ஆய்வகம்
7. கணினி அறை
8. நூலகம்
9. சமையலறை
10. குடிநீர் வசதி

**உட்கட்டமைப்பு சார்ந்த விவரங்களை பதிவேற்றம் செய்யும்போது கவனிக்கப்பட வேண்டியவை**

- கூடுதல் வகுப்பறைகளை பொருத்த வகையில் கீழ் குறிப்பிட்டுள்ள விகிதாசாரத்தின் படியும், பள்ளியில் ஏற்கனவே நல்ல நிலையில் இருக்கக்கூடிய வகுப்பறைகளையும் பழுது பார்த்தால் நன்றாக இயங்கக்கூடிய வகுப்பறைகளையும் நீக்கிவிட்டு கூடுதல் வகுப்பறைகளின் தேவைகள் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

| பள்ளியின் வகை | மாணவர்-வகுப்பறை விகிதாச்சாரம் |
|---|---|
| மேல்நிலை மற்றும் உயர்நிலைப்பள்ளி | 40 : 1 |
| நடுநிலைப்பள்ளிகள் | 35 : 1 |
| தொடக்கப்பள்ளிகள் | 30 : 1 |

- ஒரு சில பள்ளியில் மாணவர் வகுப்பறை விகிதாச்சாரப்படி தேவை எழவில்லையானால் கூடுதல் வகுப்பறைகளின் தேவை உள்ளது எனில் RTE-2019 ன்

படி ஒரு ஆசிரியருக்கு ஒரு வகுப்பறை என்ற விகிதத்தில் தேவைகளை உள்ளீடு செய்யலாம்.

**<u>கழிப்பறைகள்</u>**

- கழிப்பறைகளை பொறுத்தவரையில் கீழ் குறிப்பிட்டுள்ள விகிதாச்சாரத்தின் படியும், பள்ளியில் ஏற்கனவே நல்ல நிலையில் இருக்கக்கூடிய கழிப்பறைகளையும் பழுது பார்த்தால் நன்றாக இயங்கக்கூடிய கழிப்பறைகளையும் நீக்கிவிட்டு கூடுதல் கழிப்பறைகளின் தேவைகள் பதிவேற்றம் செய்யப்படவேண்டும். ஒரு கழிப்பறை அலகு என்பது 2 Water closets மற்றும் 6 Urinals உள்ளடக்கியதாகும். இதனை கணக்கில் கொண்டு பள்ளியில் கழிப்பறை தேவைகளை உள்ளீடு செய்ய வேண்டும்.

| Water Closet Ratio | Urinal Ratio |
|---|---|
| 1:40 | 1:20 |

- பள்ளிகளில் மாற்றுத்திறனாளி மாணவர்கள் இருப்பின் அவர்களுக்கு என்ன தனியாக ஒரு கழிப்பறை தேவை பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

**<u>பிற கட்டமைப்பு வசதிகள் மற்றும் தேவைகள்</u>**

- பள்ளியில் உள்ள மொத்த மாணவ மாணவியரின் எண்ணிக்கைகேற்ப குடிநீர் வசதி இல்லாத பட்சத்தில் கூடுதல் குடிநீர் வசதி கேட்கலாம்.
- ஆய்வகங்கள்,சமையலறை, நூலகம், கணினி அறை, சுற்றுச்சுவர் மற்றும் பிற உட்கட்டமைப்புகளை பொறுத்தவரையில் சார்ந்த பள்ளிகளுக்கு தேவை இருப்பின் கேட்கலாம்.
- மேற்குறிப்பிட்ட அனைத்து கட்டுமான பணிகளுக்கும் பள்ளிகளில் போதுமானதாக நிலம், இடவசதி இருப்பதை உறுதி செய்த பின்னரே உட் கட்டமைப்பு தேவைகளை தலைமை ஆசிரியர்கள் உள்ளீடு செய்ய வேண்டும்.